**பிப்ரவரி – 12**

# TNPSC துளிகள்

- வருண் சக்ரவர்த்தி, ஃபரோக் இன்ஜினியருக்கு (36 வயது, 138 நாட்கள்) அடுத்தபடியாக, ஒருநாள் போட்டிகளில் அறிமுகமான இந்தியாவின் இரண்டாவது வயதான கிரிக்கெட் வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- மணிப்பூர் மாநிலத்தில் இன வன்முறை வெடித்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அம்மாநிலத்தின் முதல்வர் N. பிரேன் சிங் இராஜினாமா செய்துள்ளார்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஐந்து நாட்கள் அளவிலான 16வது ஏரோ இந்தியா 2025 கண்காட்சியானது பெங்களூருவில் உள்ள ஏலஹங்கா இந்திய விமானப்படை நிலையத்தில் நடைபெற்று வருகிறது.
- இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் சிறப்புப் படைகளுக்கு இடையிலான சைக்லோன் 2025 எனப்படுகின்ற மூன்றாவது கூட்டு இராணுவப் பயிற்சியானது ராஜஸ்தானில் தொடங்கியது.
- மனுஷ் ஷா மற்றும் தியா சிட்டாலே ஆகியோர் முறையே 2025 ஆம் ஆண்டு தேசிய சீனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவில் பட்டங்களை வென்றனர்.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், மெக்சிகோ வளைகுடாவினை "அமெரிக்க வளைகுடா" என்று அதிகாரப்பூர்வமாக மறுபெயரிட்டுள்ளதோடு, பிப்ரவரி 09 ஆம் தேதியினை "அமெரிக்க வளைகுடா தினம்" என்றும் அறிவித்துள்ளார்.
- OpenAI நிறுவனத்தின் ChatGPT Gov என்பது அமெரிக்க அரசு நிறுவனங்களுக்கு OpenAI நிறுவனத்தின் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை அணுகுவதற்கான சில கூடுதல் வாய்ப்புகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ChatGPT வசதியின் புதிய வடிவமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.


# தேசியச் செய்திகள்

## உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தி 2024


- 2013-14 ஆம் ஆண்டில் சுமார் 2,53,346 கோடி ரூபாயாக இருந்த நாட்டின் பாதுகாப்பு துறைக்கான நிதி ஒதுக்கீடானது, 2024-25 ஆம் ஆண்டில் 6,21,940.85 கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- 2023-24 ஆம் நிதியாண்டில், இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியானது ஒரு சாதனை அளவிலான உச்சமாக 1.27 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- இது 2014-15 ஆம் நிதியாண்டில் பதிவான 46,429 கோடி ரூபாயினை விட தோராயமாக 174% அதிகமாகும்.
- நடப்பு நிதியாண்டில் பாதுகாப்பு உற்பத்தியில் சுமார் 1.75 லட்சம் கோடி ரூபாய் என்ற இலக்கை அடைவதற்கான பாதையில் இந்தியா உள்ளது.
- இந்தியா 2029 ஆம் ஆண்டிற்குள் சுமார் 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பாதுகாப்பு உற்பத்தியை எட்டுவதற்கும், மேலும் உலகளாவியப் பாதுகாப்பு உற்பத்தி மையமாக தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2014-15 ஆம் நிதியாண்டில் 1941 கோடி ரூபாயாக இருந்த இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதியானது, 2023-24 ஆம் நிதியாண்டில் 21,083 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- முந்தைய நிதியாண்டான 2022-23 ஆம் ஆண்டில் இருந்த 15,920 கோடி ரூபாயாக இருந்த

பாதுகாப்பு ஏற்றுமதியில் 32.5% வளர்ச்சி பதிவாகியுள்ளது.

- 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்திப் பொருட்கள் அதிகளவில் என்று ஏற்றுமதி செய்யப் படும் முதல் மூன்று இடங்கள் அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் அர்மேனியா ஆகியவையாகும்.




## தெற்குக் கடற்கரை இரயில்வே மண்டலம்




- புதியத் தெற்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தினை உருவாக்கும் ஒரு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை முன்னோட்ட ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் விசாகப்பட்டினத்தில் அமைக்கப்பட உள்ள தெற்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தின் தலைமையகத்திற்கு இந்தியப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- இந்த SCoR மண்டலம் ஆனது இந்திய இரயில்வே நிர்வாகத்தின் 18வது மண்டலமாக இருக்கும்.

- இதற்கான ஒரு அதிகார வரம்பு ஆனது, கிழக்குக் கடற்கரை இரயில்வே மற்றும் தென்-மத்திய இரயில்வே மண்டலங்களின் சில பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது.
- இது தெலுங்கானா மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளுடன் ஆந்திரப் பிரதேசத்தின் குறிப்பிடத்தக்கப் பகுதியை உள்ளடக்கும்.
- அமைச்சரவையானது வால்டேர் இரயில்வே பிரிவையும் (முன்னர் கிழக்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தின் கீழ் இருந்தது) இரண்டு பகுதிகளாகப் பிரித்தது.
- அரசாங்கம் ஆனது, அதன் காலனித்துவ காலப் பெயரை குறிப்பிட்டுக் காட்டி, முதல் பிரிவினை விசாகப்பட்டினம் இரயில்வே பிரிவு என மறுபெயரிட்டு அதனைப் புதிய மண்டலத்தின் கீழ் சேர்த்துள்ளது.
- மற்றொரு பிரிவானது, ஒடிசாவின் இராயகடாவில் ஒரு தலைமையகத்துடன் கிழக்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தின் கீழான புதிய பிரிவாக மாற்றப்படும்.
- கிழக்குக் கடற்கரை இரயில்வே மண்டலமானது (ECoR) 2023-24 ஆம் நிதியாண்டில் சரக்கு ஏற்றுதலில் இந்திய இரயில்வேயின் அனைத்து சாதனைகளையும் முறியடித்து உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் 2024 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி வரையில், ECoR ஆனது 250 மில்லியன் டன் சரக்குகளை ஏற்றியது என்ற நிலையில் இது 2022-23 ஆம் நிதியாண்டில் பதிவான சாதனையை முறியடித்தது.

## தண்ணீர் விட்டான் கிழங்கு குறித்த பிரச்சாரம்





- மருத்துவத் தாவரங்களின் ஆரோக்கிய நன்மைகள் குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக, தண்ணீர் விட்டான் கிழங்கு – உடல் நலம்" (Shatavari –For Better Health) என்ற தலைப்பிலான இனங்கள் சார்ந்த பிரச்சாரம் ஆனது தொடங்கப் பட்டு உள்ளது.
- தேசிய மருத்துவக் குணம் வாய்ந்தத் தாவரங்கள் வாரியமானது (NMPB) முன்னதாக நெல்லிக்காய், முருங்கை, சீந்தில் கொடி (அமிழ்தவல்லி) மற்றும் அஸ்வகந்தா ஆகிய தாவரங்களுக்காக வெற்றிகரமான பிரச்சாரங்களை மேற்கொண்டது.

- இந்த முன்னெடுப்புகள் ஆனது, மருத்துவ குணம் வாய்ந்த தாவரங்களின் ஆரோக்கிய நன்மைகள் குறித்த அறிவை நாடு முழுவதும் பரப்புவதற்கானப் பங்கினை அளித்து உள்ளன.

## பொட்டாசியம் இருப்புக்கள்

- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) நடத்திய ஆய்வுகள் ஆனது, இராஜஸ்தானின் சில பகுதிகளிலும் பொட்டாசியம் இருப்புப் பகுதிகளை அடையாளம் கண்டுள்ளன.
- இராஜஸ்தானுக்கு அடுத்தபடியாக சில குறிப்பிடத்தக்க பொட்டாசியம் இருப்புகளைக் கொண்ட இரண்டாவது மாநிலம் பஞ்சாப் ஆகும்.
- பொட்டாசியம் இருப்புகளைக் கொண்ட கபர்வாலா (முக்த்சர் சாஹிப்), ஷெர்வாலா மற்றும் ராம்சாரா (ஃபாசில்கா) மற்றும் ஷெர்கர் மற்றும் டால்மீர் கெரா (ஃபாசில்கா) ஆகிய மூன்று சுரங்கத் தொகுதிகள் சுமார் 18 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவி உள்ளன.
- பஞ்சாப்பின் இரண்டு மாவட்டங்களில் உள்ள சுரங்கங்கள் அதன் மேற்பரப்பிலிருந்து தோராயமாக 450 மீட்டர் கீழே அமைந்திருந்தன.
- பொட்டாஷ் என்பது உரங்களில் முதன்மையாகப் பயன்படுத்தப்படும் ஒரு தாதுவான பொட்டாசியம் தாதுவினைக் கொண்டுள்ளது.
- 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட பொட்டாஷ் ஆனது உரமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பத்தோடு இது N-P-K எனப்படும் மூன்று முதன்மை விவசாய ஊட்டச் சத்துக்களில் ஒன்றாகும்.





# சர்வதேசச் செய்திகள்

## காங்கோ ஜனநாயகக் குடியரசில் M23 கிளர்ச்சியாளர்கள் - கோமா

- ருவாண்டா நாட்டுப் படைப்பிரிவுகளின் ஆதரவுடன் M23 கிளர்ச்சியாளர்கள் காங்கோ

ஜனநாயகக் குடியரசின் கோமா நகரத்திற்குள் நுழைந்து அந்நகரத்தைக் கைப்பற்றி உள்ளனர்.

- சுமார் 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் பிராந்திய மையமான கோமா, ருவாண்டாவுடனான காங்கோவின் எல்லையில் அமைந்துள்ளது.
- இந்த மோதல் ஆனது 1994 ஆம் ஆண்டு ருவாண்டா இனப்படுகொலைக்குப் பிறகு காங்கோவில் நடைபெற்ற பல உள்நாட்டுப் போர்களின் தொடர்ச்சியாகும்.
- இந்த நிகழ்வின் போது, மிக முக்கியமாக டுட்சி இனக்குழுவைச் சேர்ந்த 1 மில்லியன் மக்கள் ஹுட்டு தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.
- தற்போதைய ருவாண்டா நாட்டு அதிபர் பால் ககாமே தலைமையிலான டுட்சி இனக் கிளர்ச்சியாளர்கள் அப்படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர் என்பதோடு மேலும் பல ஹுட்டு குற்றவாளிகள் எல்லையைத் தாண்டி காங்கோவிற்குள் தப்பி ஓடினர்.
- காங்கோ நாட்டின் டுட்சி பிரிவினர் தலைமையிலான கிளர்ச்சிக் குழுவானது, 2012 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது என்பதோடு இது முந்தைய டுட்சிகள் தலைமையிலான கிளர்ச்சிகளின் வாரிசு அமைப்பாகும்.





# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் மருந்து ஏற்றுமதி


- இந்தியாவின் மருந்துத் துறை ஏற்றுமதியானது 2047 ஆம் ஆண்டிற்குள் 350 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது தற்போதைய நிலைகளை விட 10 முதல் 15 மடங்கிலான அதிகரிப்பாகும்.
- இந்தியா தற்போது மருந்துப் பொருட்கள் ஏற்றுமதியின் மதிப்பில் 11வது இடத்தினைப் பெற்றுள்ளதுடன், 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியா மருந்து ஏற்றுமதியில் முதல் ஐந்து இடங்களில் உள்ள நாடுகளில் ஒன்றாக இடம் பெற முடியும்.
- 2023 ஆம் ஆண்டில் தோராயமாக 27 பில்லியன் டாலராக இருந்த நாட்டின் மருந்துப் பொருட்கள் ஏற்றுமதியானது, 2030 ஆம் ஆண்டில் 65 பில்லியன் டாலராக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- செயல்பாட்டு மருந்துப் பொருட்கள் (API) ஏற்றுமதிகள் ஆனது தற்போது 5 பில்லியன் டாலர் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

- இது 2047 ஆம் ஆண்டிற்குள் 80-90 பில்லியன் டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- தற்போது 0.8 பில்லியன் டாலர் ஆக மதிப்பிடப்பட்டுள்ள இந்திய உயிரி ஒத்த மருந்து பொருட்கள் ஏற்றுமதியானது, 2030 ஆம் ஆண்டிற்குள் ஐந்து மடங்கு அதிகரித்து 4.2 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டும் என்றும், 2047 ஆம் ஆண்டிற்குள் 30-35 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்


## பைரிகுலேரியா Spp தொற்று




- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஆனது, இஞ்சிப் பயிர்களை கடுமையாகப் பாதிக்கின்ற பைரிகுலேரியா Spp என்ற புதியப் பூஞ்சைத் தொற்று நோயை அடையாளம் கண்டுள்ளது.
- பைரிகுலேரியா Spp என்பது ஒரு பூஞ்சை நோய்க் கிருமியாகும் என்பதோடு இது இஞ்சி சாகுபடிக்கு ஒரு புதிய அச்சுறுத்தலாக ஒரு பெருந்தொற்றினை ஏற்படுத்துகிறது.
- பைரிகுலேரியா ஆனது அரிசி, கோதுமை மற்றும் பார்லி போன்ற சில ஒருவித்திலைத் தாவரங்களில் தொற்றுகளை ஏற்படுத்துவதற்காக நன்கு அறியப்பட்ட கிருமியாகும்.

- 2024 ஆம் ஆண்டில் கர்நாடகாவின் குடகு மாவட்டத்தின் சில பகுதிகளில் பயிரிடப்பட்ட இஞ்சி பயிரில் பைரிகுலேரியா பாதிப்பு முதன்முறையாக பதிவாகியுள்ளது.
- இந்தத் தொற்று ஏற்பட்டவுடன், அது வேகமாகப் பரவி, சில மணி நேரங்களுக்குள் முழு வயலையும் தாக்கும்.
- 10 மணி நேரத்தில், சில பாதிக்கப்பட்ட வயல்கள் மூலம் 20 கி.மீ இடைவெளியில் அமைந்துள்ள பெரிய பகுதிகளையும் இது தாக்கும்.

## குயிபு மாபெரும் திரளமைப்பு



- அறியப்பட்ட பேரண்டத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மாபெரும் திரளமைப்பை வானியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த மாபெரும் திரளமைப்பிற்கு "குயிபு" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது வியக்கத்தக்க வகையில் தோராயமாக சுமார் 1.3 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவிற்கு நீண்டுள்ளதோடு இதில் மதிப்பிடப்பட்ட 200 குவாட்ரில்லியன் சூரிய நிறைகளையும் கொண்டுள்ளது.
- குயிபுவின் மாபெரும் அளவானது பால் வெளி அண்டத்தின் நீளத்தை விட 13,000 மடங்கு அதிகமாகும்.
- இது பிரபஞ்சத்தில் அறியப்பட்ட மிக நீளமான திரளமைப்பு ஆகும் என்பதோடு மேலும் இது லானியாக்கியா மீத்திரள் போன்ற முந்தைய மாபெரும் திரளமைப்புகளை விஞ்சி உள்ளது.
- ஷேப்லி மீத்திரளமைப்பு, செர்பென்ஸ்-கொரோனா போரியாலிஸ் மீத்திரளமைப்பு, ஹெர்குலஸ் மீத்திரளமைப்பு மற்றும் ஸ்கல்ப்டர்-பெகாசஸ் மீத்திரளமைப்பு ஆகிய நான்கு பெரிய மீத்திரளமைப்புகள் இதனுடன் சேர்த்து கண்டுபிடிக்கப் பட்டன.
- இந்த ஐந்து மீத்திரளமைப்புகளும் சேர்ந்து அண்டத் திரல்களில் 45 சதவீதத்தையும், அண்டத்தில் சுமார் 30 சதவீதத்தையும், பேரண்டத்தில் உள்ள பருப்பொருளில் 25 சதவீதத்தையும் கொண்டுள்ளன.
- அவை பேரண்டத்தின் அளவில் தோராயமாக 13 சதவீதத்தை உள்ளடக்கியது.

# மாநிலச் செய்திகள்

## ஆந்திரப் பிரதேசத்தில் கோபி மீன்

- ஆந்திரப் பிரதேசத்தில் காக்கிநாடாவிற்கு மிக அருகிலுள்ள கோரிங்கா வனவிலங்குச்


சரணாலயத்தில் ஹெமிகோபியஸ் ஹோரவெனி & முகிலோகோபியஸ் டைக்ரினஸ் ஆகிய இரண்டு வகையான கோபி வகை மீன்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

- அவை இதற்கு முன்னதாக ஆந்திரப் பிரதேசத்தில் கண்டறியப்பட்டதில்லை.
- இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் முதன்முறையாக M. டைக்ரினஸ் வகை இனம் கண்டுபிடிக்கப் பட்டதால் இந்த கண்டுபிடிப்பு குறிப்பிடத் தக்கதாகக் கூறப்படுகிறது.
- இந்த இரண்டு இனங்களும் பொதுவாக "கோபி மீன்கள்" என்று அழைக்கப்படும் மீன் இனக் குழுவைச் சேர்ந்தவையாகும்.
- பெரும்பாலான கோபி மீன்கள் கழிமுகப் பகுதிகளில், குறிப்பாக சதுப்புநிலங்களைச் சுற்றியப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- 1988 ஆம் ஆண்டு முதல், ஆந்திரப் பிரதேசக் கடற்கரையில் மேற்கொள்ளப்பட்ட மிக விரிவான ஆய்வுகளில் 352 இனங்கள் மற்றும் 140 குடும்பங்களை உள்ளடக்கிய 615 துடுப்புடைய மீன் இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இருப்பினும், கோபி மீன்கள் குறித்து அவ்வளவு விரிவாக ஆய்வு செய்யப்படவில்லை.



# முக்கிய தினங்கள்

## சர்வதேச அரேபியச் சிறுத்தை தினம் - பிப்ரவரி 10





- இத்தினத்தின் அனுசரிப்பானது முதன்முறையாக 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது.

- இத்தினமானது, அரேபியச் சிறுத்தையின் மீதான ஒரு கவனத்தை ஊக்குவிப்பதோடு, அவற்றின் வளங்காப்பு முயற்சிகளில் பொதுமக்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கிறது.
- அரேபியச் சிறுத்தை (பாந்தெரா பர்டஸ் நிம்ர்) ஆனது அரேபியத் தீபகற்பத்தில் காணப் படும் மிகவும் அருகி வரும் சிறுத்தைகளின் ஒரு கிளையினமாகும்.

## சர்வதேச வலிப்பு நோய் தினம் - பிப்ரவரி 10

- சர்வதேச வலிப்பு நோய் தினம் (IED) ஆனது 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் 2வது திங்கட்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.
- இது சர்வதேச வலிப்பு நோய் வாரியம் (IBE) மற்றும் சர்வதேச வலிப்பு நோய்க்கு எதிரான கூட்டமைப்பு (ILAE) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- வலிப்பு நோய் என்பது நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்களை மிகவும் உளவியல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் பாதிக்கும் ஒரு மிகவும் பரவலான மருத்துவப் பாதிப்பு நிலையாகும்.
- உலகளவில் உள்ள சுமார் 650 லட்சம் வலிப்பு நோய் பாதிப்பு கொண்ட நோயாளிகளில், தோராயமாக சுமார் 80% பேர் வளர்ந்து வரும் நாடுகளில் உள்ளனர் என்பதோடு அந்த நாடுகளில் 1,00,000 நபர்களுக்கு 40-70 பேர் என்ற எண்ணிக்கையில் புதியப் பாதிப்புகள் பதிவாகின்றன.
- இந்தியாவில் பதிவாகியுள்ள ஒட்டுமொத்த வலிப்பு நோய் பாதிப்பு 1000 பேருக்கு 5.59-10 என்ற வரம்பில் உள்ளது.
- வலிப்பு நோய் பாதிப்பு உள்ள ஒரு கோடிக்கும் அதிகமான நோயாளிகள் இந்தியாவில் தான் உள்ளனர் என்ற நிலையில் இது இந்தியாவின் மக்கள் தொகையில் சுமார் 1 சதவீதத்திற்கும் அதிகமான எண்ணிக்கையினைக் குறிக்கிறது.
- நகர்ப்புற மக்களை விட கிராமப்புற மக்களில் (0.6%) அதிகப் பாதிப்பு (1.9%) பதிவாகி இருந்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “MyEpilepsyJourney” என்பதாகும்.




## தேசியக் குடற்புழு நீக்க தினம் - பிப்ரவரி 10

- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் ஆனது 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தேசியக் குடற்புழு நீக்க தினத்தினை நிறுவியது.
- இந்தத் திட்டமானது 2016 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் பரவியிருக்கும் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- அப்போதிலிருந்து, இந்தியாவில் பிப்ரவரி 10 மற்றும் ஆகஸ்ட் 10 ஆகிய தேதிகளில்

ஆண்டு தோறும் இத்தினமானது இரண்டு முறை அனுசரிக்கப்படுகிறது.

- குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மருந்தான அல்பெண்டசோல் என்ற மாத்திரைகளை வழங்குவதே இத்தினத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.
- 2025ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Eliminate STH: Invest in a healthier future for children".




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★